கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.109/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருமூர்த்தி | வயது | 64 |
| தந்தை பெயர் | வெங்கடாசலம் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை. )

**சாட்சி குவிமுச 311ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசாரிடம் நான் சம்பவ இடத்தை அடையாளம் காண்பித்தேனா என்றால் இல்லை. அங்கிருந்து செருப்பு, கட்டை கைப்பற்றப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அசா.4 மற்றும் அசா.5 எனது வீட்டிற்கு அருகில் வசிக்கவில்லை என்றால் சரிதான். எனது தெருவில் சுப்பிரமணியன், கேசவன், சக்திதாசன், ராணி என்பவர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அசா.1ன் வீடு எனது வீட்டிற்கு அருகில் உள்ளது என்று நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் அவர்கள் நான் கேட்கவில்லை. அதனால் நான் கூறவில்லை. அசா.1ன் அம்மா அவரின் வீட்டில் குடியிருப்பதாக நான் தெரிவிக்கவில்லை என்றால் என்னிடம் கேட்கபடவில்லை. அசா.1ன் அம்மா கொல்லுமாங்குடியில் வசிக்கிறார் என்றால் சரிதான். எதிரி வேறு பெண்ணோடு தொடர்பில் உள்ளார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். குடும்ப நல நீதிமன்றத்தில் அவர்கள் சேர்ந்து வாழ அறிவுறுத்தப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டின் வாசலில் உட்கார்ந்து இருந்ததாக நான் கூறவில்லை என்றால் சரிதான். அசா.1க்கு கழுத்து பகுதி, நெஞ்சு பகுதி மற்றும் முகத்தில் காயம் மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அசா.1க்கு வேறு ஏதேனும் காயம் ஏற்பட்டதாக நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். கட்டை எந்தவகையான கட்டை செருப்பு எந்த

வகையான செருப்பு என்று நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் இடது கண்ணத்தில் காயம் ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல சம்பவம் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல. அசா.1 எதிரியின் மனைவி வேலை பார்க்கும் இடத்தில் சென்று பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. எதிரி புகார் கொடுத்து விடுவார் என்று எண்ணி அசா.1 முன்னெச்சரிக்கையாக புகார் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அசா.1 எனது உறவினர் என்பதால் அவரை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:08:39 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.